DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No. 574/2018
Prosecution Witness PW 15
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. நாகராஜன் | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் - 11.07.2023.

**எதிரிஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் தற்போது மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 10.04.2018 அன்று பணியில் இருந்தபோது, நீதித்துறை நடுவர்எண். 2, உசிலம்பட்டி அவர்களின் வேண்டுகோள் கடிதம் மற்றும் எழுமலை காவல்நிலையக் குற்ற எண். 92/2018 வழக்கு சம்பந்தப்பட்ட குற்றச் சொத்துக்கள் பொருள் டிரங்கு பெட்டியில் சரியான முத்திரையுடன் பெண் மு.நி. கா. 1698 திருமதி. செல்வி என்பவர்மூலம் எங்கள் ஆய்வகத்தில் MDU/ Biol/66/2018 என்ற எண் வழங்கப்பட்டு இராசயன பகுப்பாய்விற்காக பெறப்பட்டது. டிரங்கு பெட்டியிலிருந்த குற்றச் சொத்துக்கள் முறையே வரிசை எண். 1 நைலான் பாய், வரிசை எண். 2 மண், வரிசை எண். 3 மண், வரிசை எண். 4 சுமார் 48 செ.மீ நீளமுள்ள அரிவாள், வரிசை எண். 5 வேஷ்டி, வரிசை எண். 6 சட்டை, வரிசை எண். 7 சேலை, வரிசை எண். 8 ஜாக்கெட் ஆகியவற்றை உயிரியல் பிரிவில் ஆய்வு செய்ததில், வரிசை எண்,. 1, 2 மற்றும் 4 முதல் 8 உள்ள பொருட்களில் இரத்தக்கறை கண்டறியப்பட்டது. வரிசை எண். 3ல் இரத்தக்கறை தென்படவில்லை என்ற உயிரியல்அறிக்கை நீதித்துறை நடுவர்எண். 2 உசிலம்பட்டி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், இரத்தக்கறைகளின் இனம் மற்றும் வகை அறியும் பொருட்டு குருதி வடி நீரியல் பிரிவில் ஆய்வு செய்ததில், வரிசை எண். 1, 2, 4, 7 மற்றும் 8 .....

ஆகியவற்றில் இரத்த வகை "O” இரத்த வகையைச் சார்ந்தது என்றும், வரிசை எண். 5 மற்றும் 6 ஆகியவற்றின் இரத்தக் வகையினை அறுதியிட்டு கூற இயலவில்லை மேற்கண்ட வரிசை எண்கள் அனைத்தும் மனிதவகை இரத்த வகைகள் என்ற குருதி வடிநீரியல் அறிக்கை நீதித்துறை நடுவர்எண். 2, உசிலம்பட்டி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படுவது பகுப்பாய்வு அறிக்கை அது அ.சா.ஆ.18 மற்றும் அ.சா.ஆ.19 ஆகும். இது சம்பந்தமாக எழுமலைகாவல்நிலைய ஆய்வாளர்என்னை விசாரித்தார்.

**வழக்கறிஞரின்வேண்டுகோளின்பேரில் குறுக்குவிசாரணை இல்லை.**

ஒப்பம் - நாகராஜன்

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxxxx

முதன்மை அமர்வு நீதிபதி,

மதுரை.